# பு(து)த்தகம்!




## பிரபஞ்ச தரிசனம்

ஞானபாரதி செந்தமிழ்த்தாசன்

காலம் காலமாக அறிவுக் களத்திலும் அமர்க்களத்திலும் நின்று வென்று சாதித்த வீரர்கள், தீரர்கள் அறிஞர்கள் என்று ஏராளமானோரின் வரலாற்றுப் பாதையில் பயணித்து அவர்களைப் பற்றி அறிந்திடவேண்டிய அரிய தகவல்களைச் சொல்லும் நூல்.

**இளைஞர் இந்தியா புத்தகாலயம், 109, பெருமாள் கோயில் தெரு, மாதவரம், சென்னை-600060, 448 பக்கங்கள், விலை: ரூ.250/- போன்: 93817 01961.**




## நீங்கள் இன்னும் ஏன் கோடீஸ்வரர் ஆகவில்லை?

இராம்குமார் சிங்காரம்

எல்லோருமே எப்படியாவது பணக்காரர் ஆகிவிடவேண்டும் என்றுதான் நினைக்கிறார்கள். ஆனால், அனைவருக்கும் அது சாத்தியம் ஆகிறதா? அதற்குக் காரணம் எண்ணங்கள் மாறுபடுவதுதான். உங்கள் எண்ணத்தை முறைப்படுத்தி, அதையே ஏணியாக்கி அதில் ஏறிச் சென்று பணம் பறிக்கும் வித்தையை, உலகப் பணக்காரர்களை உதாரணமாக்கிச் சொல்லித்தரும் புத்தகம் இது.

**தாய் வெளியீடு, சத்யபாபா எம்.ஜி.ஆர். மாளிகை, 11,13, துர்க்காபாய் தேஷ்முக் சாலை, சென்னை-600028. பக்கங்கள்: 136. விலை: ரூ.120/-**




## நித்தமும் உந்தன் நிழலில்!

முத்து காமிக்ஸ்

மரித்த கணவனின் நினைவு நாளில், வாழ்ந்த ஊர் சென்று அவன் கல்லறையில் மலர் வைத்து மரியாதை செலுத்த நினைக்கும் மனைவி. அப்பாவின் மரணத்தில் உள்ள மர்மத்தை அறியத் துடிக்கும் மகன், SODA. தான் ஒரு போலீஸ் டிடெக்டிவ் என்ற உண்மையை அம்மாவிடம் மறைத்து பாதிரியார் என்ற போர்வையில் கூடவே செல்லும் சோடா, தந்தையின் சாவுக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்துப் பழிவாங்கும் கதை. SODAவின் சாதுர்யம், சண்டை, சாகஸத்தில் பரபரவெனப் பற்றிக் கொண்டு சூடு பறக்கிறது! ஷார்ப்பான டயலக்குகளும் ஷைனிங்கான படங்களும் வாவ்! காமிக்ஸ் ப்ரியர்களின் புக் ஷெல்ஃபுக்கு ஒரு நைஸ் கலெக்‌ஷன்!

**பிரகாஷ் பப்ளிஷர்ஸ், 89, சேர்மன் P.K.S.A.A.ரோடு, அம்மன் கோயில் பட்டி, சிவகாசி-626189. விலை: ரூ. 90/-. போன்: 04562-272649.**




## உலகத் தமிழ்க் களஞ்சியம்

முதன்மைத் தொகுப்பாசிரியர் இ.ஜே.சுந்தர்

தமிழைப் பற்றியும், தமிழ்நாடு, தமிழர்தம் பண்பாடு, நாகரிகம், தமிழுக்குத் தொண்டுபுரிந்தோர், தலைநிமிர்ந்த தமிழர்கள் என்று உலகளாவி உயர்ந்து நிற்கும் தமிழ் குறித்த அத்தனை விஷயங்களையும் அறிந்து கொள்ள உதவும் அற்புதமான தமிழ்க் களஞ்சியம். இதுவரை வேறு எவரும் செய்யாத அரிய முயற்சியாக அறிஞர்கள் பலரின் துணையோடு, அகத்தியர் காலம் முதல் அண்மைக்காலம் வரையான அத்தனை விஷயங்களையும் தொகுத்திருப்பது, பிரமிக்க வைக்கிறது. தமிழன் என்று சொல்லித் தலை நிமிர்ந்திடும் அத்தனைபேரும் வாங்கி வாசிக்க, தலைமுறைக்கும் பாதுகாத்திட வேண்டிய பொக்கிஷம் என்றே சொல்லலாம்.

**உமா பதிப்பகம், கோலாலம்பூர். இந்தியாவில்: 3B புஷ்கர் நிவாஸ் அபார்ட் மெண்ட்ஸ், 11-வது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை-600040. மூன்று தொகுதிகள், விலை: ரூ. 3000/- போன்: 98410 68832.**

**ஆர்.நாகராஜன்**